# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2316/25 - 2023 ජනවාරි මස 25 වැනි බදාදා - 2023.01.25

2316/25 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. - 21/1978* (X) (ஈ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) (ஆ) பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 94125 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் களனி, பொலேகல்ல, மானெல்வத்தவில் அமைந்துள்ளதுமான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோட் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS)தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றக்கொண்டு, அதன் I ஆம் நிரலிலும் மற்றும் II ஆம் நிரலிலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "பிரயோக தொடர்பாடல் மற்றும் ஊடாக தொழில்நுட்பத்தில் கௌரவ கலை இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து முறையே இதற்கான II ஆம் அட்டவணையின் நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளை இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய சேர்ப்பதன் மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் I ஆந் திகதிய 2308/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை இக்கட்டளையால் திருத்துகின்றேன்.


1A - PG 6187 — 286 (2023/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) ஆனது, ஆகக்குறைந்த 120 திறமை மட்டங்களுடன் (SLQF மட்டம் 6) பூர்த்தி செய்த, பிரயோக தொல்பொருளியலில் கௌரவ கலை இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞான துறையில் ஒரே தடவையில் மூன்று (3) “சாதாரண சித்திகள்” (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBM) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் - நிகழ்ச்சித்திட்ட மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு முனைவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| பிரயோக தொல்பொருளியலில் கௌரவ கலை இளமாணி | பிஏ கௌரவ (பிரயோக தொல்பொருளியல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த (பா. உ.)**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023, சனவரி 24.*

EOG *01 - 0233*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.